# இலக்கிய படைப்பு கருத்தரங்கம்




■ சாகித்திய அகாதெமி மற்றும் புதுவை தமிழ் சங்கம் இணைந்து நடத்திய மா. அரங்கநாதனின் இலக்கியப்படைப்புகள் குறித்த கருத்தரங்கில் சாகித்திய அகாதெமி பொதுக்குழு உறுப்பினர் சுந்தரம் முருகன் பேசினார்.

**புதுச்சேரி, ஜூலை 21–**

சாகித்திய அகாதெமி மற்றும் புதுவை தமிழ்சங்கம் சார்பில், அரங்கநாதனின் இலக்கிய படைப்புகள் குறித்த கருத்தரங்கம், புதுவை தமிழ்ச் சங்கத்தில் நடந்தது.

கருத்தரங்கிற்கு, சாகித்திய அகாதெமி பொதுக்குழு உறுப்பினர் சுந்தரமுருகன் தலைமை தாங்கினார். ஆலோசனை குழு உறுப்பினர் யுகபாரதி வரவேற்றார். புதுவை தமிழ் சங்க தலைவர் முத்து வாழ்த்துரை வழங்கினார். செயலர் பாலசுப்ரமணியன் கருத்துரை வழங்கினார்.

கருத்தரங்கில், பஞ்சாங்கம் அரங்கநாதனின் வாழ்வும் படைப்புகளும் என்ற தலைப்பிலும், சண்முகம் அரங்கநாதனின் சிறுகதைகள் குறித்தும், சீனு தமிழ்மணி ரங்கநாதனின் கட்டுரைகள் குறித்தும், பிரபா ரங்கநாதனின் நாவல்கள் குறித்து உரையாற்றினர்.

கருத்தரங்கில், தமிழ் சங்க உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டனர்.